ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

# திராவிடநாடு

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 2 | காஞ்சிபுரம் 9—1—44. சுபானு மார்கழி 25—ஞாயிறு | இதழ் 43.

நெ—8. தோழர் கலியாண சுந்தரனாருக்கு (முதலியார்)

## கைவல்யம் கடிதம்.

தங்களைப் படிப்பிலும், அறிவிலும், மரியாதையிலும் அன்று நினைத்ததுபோலவே இன்றும் நினைக்கிறோம். நீங்களோ எங்களை அன்றுபகைத்ததுபோலவே இன்றும் பகைக்கிறீர்கள், அன்று சொன்னதுபோலவே இன்றும் கலைப்படிப்பில்லாதவர்களென்று சொல்லுகிறீர்கள். அதையும் எங்களுக்குவிரோதப்பட்டவர்களை முன்னிறுத்திச் சொல்லுகிறீர்கள். அதில் தங்கள் வாழ்க்கை எவ்வளவு விசாலப்பட்டாலும் அப்படிச் சொல்லுவது உண்மையா? நியாயமா? எல்லாருக்கும் ஆத்மக்கலை வளர்ச்சி வரவேண்டுமென்று சொல்லும் தங்களுக்கு ஆத்மகலைவளர்ச்சி வந்திருக்கிறதா? இல்லையே வந்திருந்தால் உள்ளத்தில் பாவம் வெட்கமாக வந்து சுடாவிட்டாலும் தெய்வக்கோலமாகவந்துசுடுகின்றது என்றல்லவா ஆத்மக்கலை உணர்ச்சி சொல்லுகிறது.

எங்கள் பேரிலுள்ள இழிவுகளும், சமயச்சடங்குகளினால் உண்டாகும் தொல்லையும், பணச்செலவும் வழியில் போவதை எல்லாம் பலபெயரிட்டுப்பலதெய்வமாகக் காட்டிப் பிரார்த்தனை, அர்ச்சனை, ஆராதனை என்பவைகளைச் சொல்லி அதற்கு ஒற்றர்கள், தரகர்ஏற்படுத்திப்பழய பணக்காரர்களைப் பாழ்படுத்திப் பல சுகங்களை அனுபவித்தது பத்தாதென்று, இப்பொழுது உண்டாயிருக்கும் புதுப்பணக்காரன் வீட்டையும் சூழவரும் ஆச்சாரி, புரோகிதர்களும் அவர்கள் காட்டும் வேதசாஸ்திர இதிகாசங்களும் ஒழியவேண்டுமென்பதே எங்கள் சுயமரியாதைச் சங்கத்தின் கொள்கை. அதற்காக வேதஸ்மிருதிகளின் ஒரு சார்பையும் அதிலுள்ள ஏமாற்றுத் தந்திரங்களையும், இதிகாச புராணங்களிலுள்ள பொய்களையும், அது ஏற்பட்ட காரணங்களையும், பண்டிதர்களால் பரவினதையும், இனிப் பரவாமலிருக்கவேண்டிய நியாயங்களையும், இத்தனைக்கும் காரணமாக இருப்பவர்களிடம் சொல்லுகிறோம். அவர்கள் அதற்குப் பதில்சொல்லவேண்டும், அதற்குப்பதில் நாங்கள்சொல்லுகிறோம். சனசமூகம் தெரிந்துகொள்ளட்டும், நீங்களேன் முன்னால்வந்து மார்தட்டுகிறீர்கள். இதற்குமுன் எங்களை அடக்கி அழிக்க வைசிராய் கோசன் பிரபுவைக்கூப்பிட்டீர்கள், அதுபோல் இப்பொழுது எங்களை எல்லாம் அடியோடு தொலைக்க வைசிராய் சபை மெம்பரான T. T. கிருஷ்ணமாச்சாரியார் கூட்டத்தில் நின்று பேசுகிறீர்கள்.

சுயமரியாதைச் சங்கம் குற்றம்சொல்லும் இந்து சமயத்தில் ஒருபகுதியான சைவசமயத்தைச் சேர்ந்த சிவபெருமானையும் சமயாச்சாரிகளையும்குற்றம்சொல்லுகிறீர்கள். அதனால்நான் அதைக்கேட்கவேண்டியிருக்கிறது. நான் சைவன் அல்லவா என்று சொல்லுவீர்களானால், நீங்கள் சொல்லுவதும் நியாயமேயாகும். உங்கள் பார்ப்பாரச் சிநேகிதர்களின் மகிழ்ச்சிக்கும் திருப்திக்கும், அதனால் உங்களுக்குண்டாகும் க்ஷேமத்திற்கும் எழுதவோ சொல்லவோவேண்டிவரும். வந்தால், அறப்போர், மறப்போர் தவம் செய்யவேண்டும். கலைஉணர்ச்சி கலைவளர்ச்சி முதலிய வார்த்தைகளை அங்கும்மிங்குமாகச் சொல்லாமல் விபரமாகச் சொல்லவேண்டும். நீங்கள் சொல்லுவது பண்டிதர்களுக்கு அர்த்தமாகலாம், கலைப்படிப்பில்லாத எங்களுக்கும்தெரியவேண்டுமே.

தாங்கள் சுயமரியாதைப்பிரசாரத்தைத் தடுக்க, முன்பல பிரயத்தனங்கள் செய்தீர்கள். சைவசபை கூட்டினீர்கள், பெரியபெரிய பண்டிதர்களை எல்லாம் கூட்டிவந்து பேசவைத்தீர்கள். சபைத்தலைவராகவுமிருந்தீர்கள், அந்தப் பெரிய பண்டிதர்கள் எங்கள் பக்கமே பேசிவிட்டார்கள். பாக்கி உங்களிடமிருந்தது, திருஞானசம்பந்தரைக் குற்றம் சொல்லுகிறார்கள் என்பதை சைவர்களுக்காகவும் சீதையைக் குற்றம்சொல்லுகிறார்கள் என்பதை வைணவர்களுக்காகவும் வைத்துக்கொண்டிருந்தீர்கள். குற்றிகாட்டி இடறினால் குப்புறவிழவேண்டுமென்கிற தலைப்பெயருடன் குடி அரசு பதிலும் சொல்லுகிறது. பதினான்கு வருடத்திற்குமுன் திருநெல்வேலி தென் இந்திய சைவசித்தாந்தத்தின் ஆண்டுவிழாவில் தாங்கள் தலைமை வகித்தீர்கள். அந்தச்சபையில் பெரியபண்டிதர்கள் சொன்னதைக் கீழே எழுதித் தங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

### திருக்குறள் அவதானியார். தென்காசி சுப்பிரமணியதாஸ் சொன்னது.

தற்காலம் மக்களிடம் அறிவுவளர்ச்சியில்லாமையாலே சில சுயநலப்பண்டிதர்களால் மக்கள் ஏமாற்றமடைகிறார்கள். மக்கள் விடுதலையடைய வேண்டுமானால் கடவுள், மதம், சமயம், புராணம், காவியம், நயம் என்று பிரசாரம் செய்வதைப் பார்க்கிலும் மக்களுக்கு அறிவு வளர்ச்சிக்கு வேண்டியதைக் கற்பித்தால் உபயோகமுண்டு. நமது நாடும் மக்களும் விடுதலையடைவார்கள். பொதுஅறிவிற்குப் புலனாகாத தற்காலப்போக்கிற்கு முரண்பட்ட பழம் புராணங்களையும் காவியங்களையும் சிறப்பு வகையில் அதற்குப் பொருள் இது, இதற்குப்பொருள் அது என்று வியாக்யானம்செய்து பொழுதுபோக்குவதற்குத்தெய்வப்புலமை திருவள்ளுவர் அறிவுடைமை அதிகாரத்தில் இடமில்லை என்றார்.

### K. சுப்பிரமணியப்பிள்ளை M. A; M. L; பேசியது.

கோவில், மக்களை ஏமாற்றிப் பணம்பறிக்கும் இடமாகமாறிவிட்டது, சமயத்தினாலும் மதத்தினாலும், ஜாதிப்பிரிவினையோ உயர்வுதாழ்வோ மக்கள் பிறவியினாலேயே கிடையாது. உண்மைச் சமய சட்டங்களில் கடவுள் முன்னிலையில் மக்களுக்கு வழிபடும் உரிமை உயர்வுதாழ்வில்லாது சமத்துவமாயும், சம சுதந்தரமாயும் காண்கிறோம். ஆகமங்களும் வேதாகமங்களும் காலத்திற்கு ஏற்றவாறு அவ்வக்கால அறிஞர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய்ச்சிமூலமாக அறிகிறோம். அதைஒரு சுயநலவகுப்பாரும் அவர்களுடன் கலந்து மயக்கம் கொண்ட நம்மவர்களிற்சிலரும் கடவுள் சொன்னது அனாதியென்று பாமரமக்

(8-ம் பக்கத்தொடர்ச்சி.)

# கலை மன்னன்!

முத்தமிழ்க்கலா வித்வரத்ன T. K. சண்முகம் எழுதுவது.

உறுதியானஉடல்கட்டு; கலங்காத உள்ளம்; பண்டையச் சங்ககால மறத்தமிழனை நினைப்பூட்டும் உருவம்; பழகியவர் எவரையும் தமது உறவினன்போல் பரிவு காட்டி நடத்தும் பண்பு; செயலாற்றும் திறன்; இத்தனையும் ஒருங்கே அமையப் பெற்றவர் **நமது ராஜா.**

உருவத்தைப் போலவே உள்ளமும் பெரிது. ஒரு நண்பர் மற்றொருவரை நோக்கி, "ராஜாவின் உருவம் என் இவ்வளவுபெரிதாயிருக்கிறது?" என்று வேடிக்கையாகக் கேட்டாராம். அதற்கு அவர் "மனது ரொம்பப்பெரிது. அது தங்குவதற்காக உருவத்தைப் பெரிதாக்கி இடம் பிடித்துக்கொண்டது"என்று மறுமொழி கூறினாராம்.

முற்காலத்தில் தமிழரின் வலிமையை வடநாடறியச்செய்தவன் **சேரன் செங்குட்டுவன்.** இவ்விருபதாம் நூற்றாண்டில் தமிழனின் வலிமையை வடநாடறியச் செய்த வீரன் **ராஜா சாண்டோ.**

குறுகிய உள்ளமும், கோணல் புத்தியும் கொண்ட வடநாட்டாருக்குத் தென்னிந்தியமக்களைக்கண்டால் பிடிப்பதே இல்லை. அவர்கள் தமிழர்களைப்பார்க்கும் பார்வையிலேயே ஓர்வித வெறுப்பும், அலட்சியமும்தோன்றும். "மதராஸ் வாலா" என்ற பெயரால்தான் அவர்கள் தென்னாட்டாரைக்குறிப்பது வழக்கம். நமது பெரிய பெரிய தேசாபிமானிகளி லிருந்துசாதாரண மனிதன்வரை எவரையெடுத்துக் கொண்டாலும் வடநாட்டில் இதே மரியாதைதான்.

அடியார்க்கடியராகிய நமக்கு வடநாட்டிலிருந்துஇங்குஇறக்குமதியாகும் கழுதையிடங்கூட ஒரு புதுஒளி தோன்றும். அங்கு ஊர்பேர்தெரியாத ஒரு "அன்னக்காவடி" இங்குவந்தால் உடனே மாலை மரியாதைகள் செய்து, தாபமிட்டுத் துதிபாடி, வாழ்த்துக்கூறி வரவேற்கத் தவறுவதில்லை.

நம்மிடமிருக்கும் இரத்தினங்களும், மாணிக்கங்களும், முத்துக்களும் நமது இருளடைந்த கண்களுக்கு வெறும்கருங்கற்களாகத் தோன்றும். வடநாட்டிலுள்ள மண்ணும், செங்கல்லும்கூட இங்குவந்தவுடன் ஒளிவீசும் வைரமாகிவிடும்.

சில நாட்களுக்குமுன் 'சாந்தாஆப்தே' என்ற பெயருடைய வடஇந்திய நடிகை தென்னாட்டுக்கு விஜயம்செய்திருந்தார். அடேயப்பா! சென்னை,மதுரை முதலிய நகரங்களில் என்ன ஆடம்பரமான வரவேற்பு! அந்த அம்மையின் கலாசேவையைப் பாராட்டி எத்தனை வாழ்த்துப் பத்திரங்கள்!!! வெள்ளிக் குடங்களென்ன, பேழைகளென்ன, விதவிதமான பரிசில்களென்ன!!!! படமுதலாளிமுதல் பாராளும் கலெக்டர் வரை, சினிமா டைரக்டர் முதல் சேவகம் செய்யும் டபேதார் வரை விருந்துகள் நடத்தி, கூட்டங்கள்கூட்டிப்பாராட்டிப் பாமாலை சூட்டினர்.

சாந்தா ஆப்தேயின் விதவிதமான உடையலங்காரத்தைப் பற்றியும், புதுவிதமான நடையலங்காரத்தைப்பற்றியும் பத்திரிகைகளில் பல குறிப்புகள் காணப்பட்டன. தமிழ்ப்பட முதலாளிகளும், டைரக்டர்களும், நடிகையரும் பத்திரிகையாளரும் அந்தக்கலாசேவகியின் பக்கவில் போட்டிபோட்டமர்ந்து எடுத்த புகைப்படங்கள் எங்கும் பிரகாசித்தன................

வடநாட்டிலுள்ள ஒரு நடிகைக்குத் தமிழ் நாட்டில் இந்த உபசாரம் நடந்தது, ஆனால், வடவேங்கடத்திற்கும் தென்குமரிக்குமிடையே புதுக்கோட்டையிற் பிறந்து, வடநாடுசென்று, பலவித இன்னல்களுக்கிடையே, போட்டி பொறாமைகளுக்கிடையேவாழ்க்கை நடத்தி, பேசாப்படக்காலத்திலிருந்து பிரபல நடிகராய் விளங்கி, வடநாட்டிலுள்ள உயர்ந்த நடிகர்களெனக் கருதப்படுவோருக்கும் டைரக்டராயிருந்து எண்ணற்ற படங்களை டைரக்ட் செய்து, தமிழனின் வெற்றிக்கொடியை வடநாடெங்கும் நிலைநாட்டிய கலைமன்னன் "ராஜாசாண்டோ" பல்லாண்டுகளுக்குப்பின் தாம் டைரக்ட் செய்த "மேனகா"வின் ஆரம்பவிழாவிற்காகத் தமிழ் நாடு வந்தபோது சென்னை இரயில்வேநிலயத்தில் பத்துப்பதினைந்துபேர் கூடி வரவேற்றனர். அதுவும் "மேனகா"வின் கர்த்தர்களான S. K. முஹைதீன், M. சோமசுந்தரம் ஆகிய இருவரது பெருமுயற்சியால் நடைபெற்றது.

அந்தமறத்தமிழன் மாரடைப்பினால் மாண்ட செய்தியை, பெருந்தலைப்புக்களிட்டுப் பிரசுரித்துத் தமிழ் மக்களுக்கு உடனே அறிவிக்க ஒரு தினசரிப் பத்திரிகையிலும் இடமில்லாது போயிற்று. குப்பை கூளங்களுக்கெல்லாம் குறிப்புக்கள்பத்திபத்தியாக எழுதும் தினசரி ஆசிரியர்களின் பேனாமுனை, இந்த நடிகமணியின் மறைவுபற்றி நாலுவரி எழுதிவருத்தந்தெரிவிக்க நடுங்கிவிட்டது.

தமிழ் நாட்டாரின்பால் வெறுப்புற்று, தமது வாழ்க்கை முழுதையும் வடநாட்டிலேயே கழித்துவிட முடிவுசெய்திருந்த ராஜாவைத் தமிழ் நாட்டுக்குத் திருப்பிக் கொணர்ந்த பெருமை எங்கள் 'மேனகா'வைச் சேர்ந்தது.

பேசாப்படங்கள் பலவற்றின் மூலமாக எங்கள் உள்ளத்தில் இடம்பெற்றிருந்த ராஜா எங்களுக்கு டைரக்டராய் வரப்போவதையறிந்தவுடன் நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சியுற்றோம். பாஷை தெரியாதடைரக்டரிடம் அகப்பட்டுக்கொண்டு பரதவிக்கும் (துர்ப்)பாக்கியம் கிடைக்காது போனதுபற்றி எங்களெல்லோருக்கும் ஆனந்தம்.

ராஜாவின் அந்தஸ்தைப்பற்றியும், ஆடம்பரத்தைப் பற்றியும் நாங்கள் பலவிதமாகக்கற்பனைகள்செய்து வைத்திருந்தோம். அவற்றிற்கெல்லாம் மாறாக, ராஜா ஒரு குடையைப்பிடித்துக் கொண்டு சர்வசாதாரணமாகக் கம்பெனி வீட்டிற்கு வந்தவுடன் உண்மையிலேயே ஆச்சரியமுண்டாயிற்று.

"பல வருடங்களாக வடநாட்டிலேயே இருக்கிறாரே, தமிழ்மொழி நன்றாய்த் தெரிந்தவராயிருப்பாரோ, என்னவோ" என்று நாங்கள் சிறிது ஐயப்பாடுற்றிருந்தோம். முதல்நாள் சந்திப்பிலேயே ராஜா அச்சந்தேகத்தை நீக்கிவிட்டார்.

தமிழ் வரிவடிவ இலக்கணம், நன்னூல், நிகண்டு முதலியவற்றையெல்லாம் அவர் மனப்பாடம் செய்திருந்தது எங்களுக்கு வியப்பையளித்தது.

ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு மேலாக வடநாட்டிலேயே வசித்து ஹிந்தி, மராட்டி, குஜராத்தி, முதலிய வடஇந்திய மொழிகளிலேயே பழகிக் கொண்டிருந்த ராஜாவுக்கு, தமிழ்நாட்டுப்பழங்கிழவிகள் சொல்லும் சாதாரணப்பழமொழிகளெல்லாம் மறக்காமலிருந்தது, அவருக்குத் தமிழ் மொழியினிடத்தும், நாட்டின் மீதும் உள்ளூரப் புதைந்துகிடந்த பற்றுதலை வெளிப்படுத்தியது.

நடிப்புச்சொல்லிக் கொடுப்பதில் நமது ராஜாவுக்கு இணையான டைரக்டர் இந்திய நாட்டிலே இல்லையென்பது வடநாட்டாரும் ஒப்புக்கொண்ட உண்மை. ராஜா பாரதநாட்டின் ஒப்புயர்வற்ற நடிகர். அவரிடம் பயிற்சி பெறும்போது நடிப்பவன் சலிப்படைவானேயன்றி, சொல்லிக்கொடுக்கும் ராஜா சிறிதும் சலிப்படையமாட்டார்.

நடிப்பு இயற்கையாயிருக்கவேண்டுமென்பதற்காக, ராஜா விஷயங்களை விளக்கிப் பச்சைக் குழந்தைக்குச் சொல்வதுபோல் பன்முறை சொல்லுவார்.

நான் ஒருமுறை அவர் செய்துகாண்பித்ததை அப்படியேசெய்தேன். உடனே ராஜா, "அடே! நான் செய்வதை அப்படியே காப்பியடிக்காதே. சொல்வதைக் கவனித்து உனக்கு எப்படி வருகிறதோ அப்படியே செய்" என்று உபதேசித்தார்.

7-ம் பக்கம் பார்க்க.

○ தொடர்கதை ○

# பார்வதி பி. ஏ;

சௌமியன்.

கதை கற்பனையே, கதையில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:-லோபி ஆலாலசுந்தரர், அறிமுகப் படுத்தப்படுகிறர். அவருக்கு வாரிசாகவர இருக்கும் பார்த்திபன் எனும் வாலிப வாய்வீரனுக்குக் காதலி பார்வதி B. A; இவள் ஓர் இலட்சியவாதி. குமார் எனும் பாட்டாளி, பார்த்திபனுடைய பிரசங்கத்தில் இலயிக்கிறன் குமார் பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து மறைந்து விட்டதாகப் பத்திரிகையிலே செய்தி. பார்வதி கவலைப் படுகிறள். உத்தமி என்பவளின் சிநேகிதத்தால் பார்வதிக்கு டைபிஸ்ட் வேலை கிடைக்கிறது. பார்த்திபனல் 'ரட்சகன்' என்னும் பத்திரிகை நடத்தப்படுகிறது. குமார் ... பார்த்திபனுக்கும் ஜெயத்துக்கும் சிநேகிதம் உண்டாகும்படி. வேலைசெய்து மகிழ்ச்சியடைகிறர். இதற்கிடையே பார்வதியின் தோழி, உத்தமிக்கு நரசிம்மன் என்பவன் காதலனகிறன். பார்த்திபன், கதகளிநடனம் பார்க்கக் கேரளம் செல்கிறன், உத்தமி கருவுற்றள். நரசிம்மன், குமுதினி என்பவளைக் கலியாணம்செய்து கொண்டு, உத்தமியைக் கைவிடுகிறன், குமுதினியின் உதவியால் உத்தமி பெங்களூர் செல்கிறள். பிறகு.................]

குமுதினிதந்த கடிதத்தைப் படித்த பிறகு பார்வதிக்கு, ஆண்டாள் தன் புருஷனை ஏமாற்றக் கர்ப்பிணியாக இருப்பதாக நடித்துவரும் விஷயம் தெரிந்தது. இவ்வளவு தந்திரமான ஏற்பாட்டைக் குமுதினி, ஆண்டாளுக்குக் கற்றுக் கொடுத்ததை எண்ணி, "ஏண்டி குமுதினி! நீ பலே, கைகாரிபோலிருக்கிறதே" என்று கூறினுள். "பார்வதி! ஆண்களின் ஆதிக்கத்திலிருந்து தப்ப வேண்டுமானல், பெண்களுக்குத்தந்திரம் தெரிந்திருக்கவேண்டாமோ? அவர்களோ நம்மைச் சமமாகக்கருதுவதில்லை. அவர்களின் இன்பத்துக்குக் கருவியாகக்கருதுகிறார்கள். நாம் வேறெதற்கும் பிரயோஜனமற்றவர்களென்பது அவர்களின் எண்ணம். அதுமட்டுந்தானு? பெண்களை, ரம்பையே ஊர்வசியே என்றுபுகழ்வதாலும், உன்மீதுதான் எனக்கு அளவு கடந்தபிரியம் என்று பேசுவதாலும், உன்னை நான் எப்போதும் கைவிடமாட்டேன் என்று சத்தியம் செய்வதாலும் ஏமாற்றுகிறார்கள். முகத்திலே, ஜொலிப்புக்குறைந்தால், தீர்ந்துவிட்டது, வேறு பெண்களிடம், ஆண்களுக்கு நாட்டம் பிறந்துவிடுகிறது: வழக்கமாகச் செய்து கொள்ளும் அலங்காரங்களிலே கொஞ்சம் குறைந்தாலும், போதும், வேறுஆசாமியிடம் ஆண்களுக்கு மோகபிறந்துவிடுகிறது. ஆகவேதான், பெண்கள், தந்திரத்தைக் கொஞ்சமும் தளரவிடாது இருந்தால்மட்டுமே, ஆண்களை அடக்கமுடியும். என் சிநேகிதி ஆண்டாள் ஒரு குற்றமும் செய்பவளல்ல. நல்ல சுபாவம், அடக்கமானவள். ஏழைக்குடும்பம்; அனந்தாச்சாரியார் என்ற வக்கீலுக்குஅவள் மூன்றுந்தாரமாகப் போய்ச்சேர்ந்தாள். அவளை மலடி, மலடி, என்றுதிட்டுவதும், வேறுபெண்ணைக்கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென்று திட்டம்போடுவதுமாகஇருக்கலானர். ஆண்டாள் என்ன செய்வாள். அவளுக்கும்குழந்தை வேண்டுமென்று ஆசைதான்! அனந்தாச்சாரியாருக்குப்புத்தென்ற நரகத்திலிருந்துதன்னை மீட்க ஒருபுத்ரன் தேவை என்று, ஏதோ வேதம்கூறுகிறது என்ற எண்ணம். அதனல் குழந்தை தேவை என்று ஆசை. ஆண்டாளுக்குக் குழந்தை என்றுலே, அபாரமான பிரியம். பெண்களுக்கு இதுச்சஜாந்தர்னே, சீராட்டப் பாராட்ட சிரித்துவிளையாட, முத்தமிட்டு வளர்க்க ஒரு குழந்தை வேண்டும் என்று ஆண்டாள் ஆசைப்பட்டாள். பிறக்கவில்லை அவள் என்ன செய்வாள்? அவள்வேதனையுடன் இருந்தபோது, அந்த அனந்தாச்சாரி, அவளை மலடி என்று வைவதும், இந்தச் சனியனுக்குப்புத்திரசந்தானம் உண்டாகாது, வேறோர் பெண்ணைக்கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்று பேசுவதும், ஆண்டாளுக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும். என்னிடம் சொல்லி அழுதாள். நான்பிறகு ஆண்டாளுக்கு ஒருயுக்திகூறினேன். நீ கர்ப்பமாக இருப்பதுபோலப் பாவனைசெய், என்று சொன்னேன். அதை அனந்தாச்சாரி நம்பிவிட்டார், இப்போது லேடி டாக்டரிடம் காட்டச் செல்கிறாளாம். ஆண்டாள் பயந்து எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறாள். பார்வதி! அனந்தாச்சாரியின் கொட்டம் அடக்கப்படவும், ஆண்டாளின் வாழ்க்கையில் வேதனைமூளாது தடுக்கவும், உத்தமியின் உபத்திரவம் தீரவும், இப்போது ஒருவழி இருக்கிறது. லேடிடாக்டர் எனக்கு மிகவும் வேண்டியவள். பெண்களின் கஷ்டம் அவளுக்கு நன்றாகத் தெரியும், அவள் கதையும், மகா விசித்திரமானது. அவள் என் ஏற்பாட்டுக்கு இசைவாள். ஆண்டாள், லேடிடாக்டரின் விடுதியிலேயே தங்கவேண்டுமென்று ஏற்பாடு செய்துவிடலாம். அது சுலபம். ஒரு முறைக்கு இருமுறை நாடியைப்பார்த்து விட்டு கண்ணை நீக்கிப் பார்த்துவிட்டு, 'உடலிலே இரத்தம் குறைவு; பலஹீனம் அதிகம், பிரசவம் கஷ்டமாக இருக்கும், ஆஸ்பத்திரியிலேயே இருக்கவேண்டும்;" என்றுடாக்டர்கூறிவிட்டால், அனந்தாச்சாரி, சம்மதித்துவிடுவார். நீயும்உத்தமியும் அங்கு தங்கலாம், நல்லவேளையாக, ஆண்டாளின் போலி கர்ப்பமும் உத்தமியின் உண்மைக் கர்ப்பமும் ஒரேகால அளவாக இருக்கிறது. உத்தமிக்குக் குழந்தைபிறந்ததும், அதை ஆண்டாளின் குழந்தையாக்கிவிடலாம். இதுதான் என் யோசனை. அனந்தாச்சாரிக்குப் புத்திர சந்தானம் இல்லாமற்போனல், சொத்து நரசிம்மனுக்கு வரவேண்டும், நரசிம்மன் அனந்தாச்சாரிக்கு நெருங்கியபந்து. நமது ஏற்பாட்டினல், நரசிம்மனின் நயவஞ்சகத்தின் விளைவு, அவன் அனுபவிக்கக் கருதும் சொத்தை அடையமுடியும். என்ன உன் யோசனை என்று குமுதினி கூறினுள். பார்வதிக்குக் குமுதினியின் புத்திக்கூர்மையும், உத்தமியிடம்அவள் காட்டும்அன்பும், ஆச்சரியமாக இருந்தது. தலைமீது விழஇருந்த ஆபத்தை இந்தத் தளிர்மேனியாள் தடுக்க முன்வந்ததற்கு வந்தனங்கூறினுள். உத்தமியைச் சரிப்படுத்திவிடுவதாக உறுதிகூறினுள். பெங்களூர் பயணத்துக்குத் தேதியும் குறிப்பிட்டுவிட்டாள். குமுதினி, பார்வதியிடம் விடைபெற்றுக்கொண்டு போகும்போது பார்வதியைக்கட்டிக் கொண்டு கன்னத்திலே முத்தமிட்டாள். உத்தமிக்கு விஷயத்தை விளக்கிக்கூறி, இணங்கவைக்கப் பார்வதிக்குச் சற்றுச் சிரமமாக இருந்தது. "இதுமிக மானக்கேடு" என்றுரைத்த உத்தமிக்கு, நரசிம்மனின் மானத்தைப்பறிக்க இதுதான்வழி என்றுகூறினுள். பயம், சந்தேகம், சஞ்சலம், ஆகிய பலவற்றை ஓட்டினுள். பெங்களூரில், லேடி டாக்டரின் "பிருந்தாவன்" பங்களாவுக்குள், மோட்டார், குமுதினி, உத்தமி, பார்வதிஎனும் மூவரையும்கொண்டு போய்ச் சேர்த்துங்கூட, உத்தமிக்குநடப்பது நனவா கனவா, என்று சந்தேகமாக இருந்தது. குமுதினியின் திறமையால், சகல ஏற்பாடுகளும் செவ்வனே நடந்தேறின. "பிருந்தாவனத்திலே" கர்ப்பிணி உத்தமியும், கர்ப்பிணி வேஷத்திலிருந்த ஆண்டாளும் தங்கினர். ஒவ்வோர் நாளும் கோர்ட்டிலேவேலை முடிந்ததும், வக்கீல் பிருந்தாவனம் வருவார். ஆண்டாளிடம் பேசவும் அவள் உடல் நலத்தைப்பற்றி லேடிடாக்டரிடம் விசாரிக்கவும். அவருக்குத்தெரியாது பிருந்தாவனத்திலே தயாராகிக்கொண்டுவரும் லீலை. சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டுக் குமுதினி பெங்களூரைவிட்டுப் போய்விட்டாள்.

(6-ம் பக்கம் பார்க்க).

# திராவிட நாடு

காஞ்சி 9—1—44 ஞாயிறு


## விஞ்ஞானம்—விடுதலை வீரன்.

"டெலிபோனும், டெலிவிஷனும்,
விஞ்ஞானத்தின் விசேஷம் என்று புகழ்
கிறார்கள்! ஆனால் டார்ப்பிடோவும் டாங்
கியும் இன்று மனிதனை நாசம் செய்கின்
றனவே, அவை, விஞ்ஞானம் ஈன்றெ
டுத்த துஷ்டப்பிள்ளைகளன்றோ! விமான
மும் மரக்கலமும், விஞ்ஞானத்தின் அற்பு
தக் கண்டுபிடிப்புகள் என்று பெருமை
பேசுகிறார்களே, வெடிகுண்டும் விஷப்
புகையும் விஞ்ஞானத்தின் விளைவுகள்
என்பதை மறுக்கமுடியுமா! விஞ்ஞானம்
அழிவுக்குப் பயன்படுகிறது. சமுதாயத்
தின் சாந்திநிகேதனம், விஞ்ஞானவிடுதி
யிலே இல்லை! அங்கிருந்து, அமளி, அழிவு,
அக்ரமம், இவைகளேசரமாரியாகக்
கிளம்புகின்றன. நாசத்தை மேலும்மேலும்
திறமையாகச் செய்யும் கருவிகளைக்கண்டு
பிடித்து, மனிதகுலத்தை அழிக்கும் கேவ
லமானகொடுமைக்குத்தான் விஞ்ஞா
னம் பயன்படுகிறது" என்று பேசி, விஞ்
ஞானத்தின் வளர்ச்சிவினைசகாலமுதிர்ச்சி
என்று கண்ணீர்விடும் கண்ணியர்கள்,
உலகிலே, இங்குதான் ஏராளம். விஞ்ஞா
னம், உலகிலே மற்ற இடங்களிலே, முன்
னேறிவிட்டதே இங்கு முடக்குவாதக்
காரன்போல் உளதே என்ற வருத்த
மிருக்கவேண்டியதுமுறை! அதற்குமாறாக
இங்கு, விஞ்ஞானத்தைப்பழிப்பதே
மேதாவித்தனம் என்ற கருத்து இருந்தி
டக்காண்கிறோம். மின்மினிபோன்ற
விளக்கொளியும், காலடிச்சத்தம் கேட்ட
தும் குரைக்கும்குக்கலும், கலப்பையைத்
தொழும் உழவனும், அவன் காலருகே
துயிலும் மனைவியும், எருமை புரளும்குட்
டைகளும், மாடன் காட்டேரி கோயில்
களும், அவற்றருகே உள்ள வேப்பமர
மும், அதனடியிலே புழுதியிலே புரளும்
பிள்ளைகளும், அவர்கள் பாடும் ஏலே
லோக்களும், இங்கு புகழ்ச்சிக்குரியனவா
கக் கருதப்படுவதுடன், இத்தகைய கிரா
மீய வாழ்க்கையே, இலட்சியமாக இருத்
தல்வேண்டுமென்ற பேச்சும், இந்த இலட்
சியபூர்த்திக்கே இராம இராஜ்யம் என்ற
திருப்பெயரும் சூட்டப்பட்டிருக்கிறது.
அறிவாற்றலிலே காலந்தள்ளும் மேனாட்
டினர் ஆண்டவனைக் கண்டு பிடிக்கும்
ஆத்மார்த்தத் துறையிலே வறியராகிவிட்
டனர் என்று கூறுவோரும் விஞ்ஞான
வளர்ச்சியிலே ஈடுபட்ட மேனாட்டினர்,
வேதாந்தத்துறையிலேஅரிச்சுவடியும்,
அறியாதார் என்றும், இகத்தையே பெரி
தென்று கருதிப் பரலோகத்தைப்பற்றிய
சிந்தனையையே அவர்கள் மறந்தனர் என்
றும், பரிதாபமாகக்கூறிடும் பாகவதசிரோ
மணிகளும் இங்கு உண்டு!

கோழை, வீரனை, முரடன் என்று
மொழிவதும், தரித்திரன், பணக்காரனை
ஆட்கொல்லிக்கு அடிமையானான் என்று
ஏசுவதும், மனையாட்டியிடம் மற்போர்
நடத்தவேண்டிநேரிட்டகிரஹஸ்தன் துறவ
றத்தின் தூய்மையைப்பற்றித்துதிபாடத்
தொடங்குவதும் நிலைமைக்கேற்றநினைப்பு
என்று கொள்ளக்கூடியன. இங்கும்,
சிலர், விஞ்ஞானத்தைக்குறைகூறுவதும்,
இழித்துப்பழித்துப்பேசுவதும், நிலை
மையை மறைக்க நிந்தனைசெய்யும்
போக்கேயாகும். அந்தப்பழம் புளிக்கும்
என்று நரிகூறினதாகக் கதை உண்டல்
லவா, அதுபோன்றது, சிலர் இங்கு, விஞ்
ஞானமா, அது அழிவுக்கல்லவா, பயன்
படுகிறது, என்று கூறுவது. விஞ்ஞானம்
உலக வேதனைகளைத்தீர்க்க உதவியது
போல, வேறெந்த அறிவும்செய்ததில்லை.
உலகிலே நோய்க்கு மருந்து முதற்
கொண்டு, காற்றைக்கடலை, அடக்கவும்
தொலைவினினுணர்தல் தொலைவைக்கா
ணல், முதலியவற்றைச்சுலபமானதாக்கிச்
சகலரும் அடையக்கூடிய சர்வசாதாரண
மாக்கியதும் விஞ்ஞானமே. மந்திரவாதி
யின் மிரட்டுதல், புரோகிதப்பித்தலாட்டம்
பேய்ச்செயல் என்ற இன்னோரன்ன பிற
பேதமைகளைக் களைந்தது, விஞ்ஞானம்.
அச்சம் போக்கிற்று. அடிமைத்தளையை,
அறிவுக்குப்பூட்டப்பட்டிருந்ததளைகளை,
அகற்றிய பெருமை விஞ்ஞானத்தைச்
சார்ந்ததாகும்.

போர்க் கருவிகள், விஞ்ஞான முறை
யிலே உள்ளன என்பதற்காக, 'விஞ்ஞா
னத்தைத் தூஷிப்பது, கோட்டைக்கு
உபயோகிக்க வேண்டிய கருங்கல்லின்
மீது, மண்டையைமோதவைத்துக்
கொண்டு, கருங்கல்லின் கொடூரத்தைக்
கூறிக்கோவெனக்கதறும் கோணல்
புத்திக்காரன்செயல்போன்றதாகும்.
விஞ்ஞானம், பல கண்டுபிடிப்புகளுக்குக்
காரணமாக இருக்குமேயொழிய, அவை
களை உபயோகிக்கும் மக்களின் மனப்
போக்குக்கு அது ஜவாப்தாரியல்ல! வீணை
யின் நரம்புகள், நாதத்தைத்தரும், இசை
வாணனின் மிருதுவான கரத்திலே.
விஷயமறியாதானுக்குத்தூக்குக்கயிறாக்
கும் அது உபயோகமாகக்கூடும். குற்றம்
வீணையினுடையதல்ல, அந்த வீணனு
டையது. வீணை உயிர்குடிக்கும் விபரீதப்
பொருள் என்று விளம்புவதுபோன்றது,
விஞ்ஞானத்தைக் குறைகூறுவது.
ஆராய்ச்சிக்கும் அறிவின் மேம்பாட்டிற்
கும், கண்டுபிடிப்புகளுக்கும் காலத்தை
மாற்றிஅமைப்பதற்கும், மட்டுமே
பொறுப்பேற்றுக்கொண்டுள்ள விஞ்ஞா
னத்தின்மீது, வெறியாட்டக்காரரின்
போக்கால் விளையும் அழிவு விஞ்ஞானத்
தின் விளைவுதான் என்றுபழிசுமத்துவது,
அடாது! விஞ்ஞானம், தெளிவாகத்
தெரிவிக்கிறது, நான் அறிவுக்குத்
தோழன், ஆராய்ச்சியின் தொண்டன்,
என்னை உபயோகிப்போரின் தன்மைக்
கேற்றபடி பலன் கிடைக்கும் என்பதை.
முத்தமிடவேண்டிய அதரத்தை மூளி
யாக்கும்வெறியருமுண்டு! கட்டித்தழு
விடவேண்டியகாரிகையைக் கட்டை
கொண்டடிக்கும் கயவருமுண்டு! அது
போல மனிதசுகத்துக்குப் பயன்படுத்தப்
படவேண்டிய விஞ்ஞானத்தை, அழிவுக்
குப் பயன்படுத்தும் பித்தரும் உளர்.
ஆனால், இது விஞ்ஞானத்திலே மட்டுந்
தானோ, எனில், இல்லை, எதிலும் உண்டு!
மனிதனின் அறிவு, ஆற்றல், அழகு கல்வி
செல்வம், முதலியன மட்டுமேயன்றி
இயற்கைப் பொருள்கள் எவையாயினுங்
கூட, இதமளிக்கச்செய்யவும் முடியும்,
இன்னல் மூட்டச்செய்யவும் இயலும்.
அதிலும், கூர்ந்துநோக்குவோமானால்,
மனிதனின் அறிவுத்துணையின்றி, வெறும்
இயற்கையைமட்டுமே, உலக இயங்குத
லுக்குக் கொண்டு வாழ்வதென்றால், உல
கிலே, இயற்கையால் இன்பம் பெருகு
வதைவிட இடுக்கணே அதிகமாகும்.
இயற்கை நீர்ப்பெருக்கு, பெருவெள்ள
மானால், ஊரை அழிக்கும், மனித அறிவி
னால், விஞ்ஞானத்தினால் அணைகோலிப்
பாலமிட்டு வழிவகுத்துவிடின், வளமிக்க
கவயல்களுக்கு நீர்ப்பாசனமாகவும், சிங்
காரச் சோலைகட்கு நீராரமாகவும், ஒய்
யார வாழ்வுக்கு உறுதுணையாகவும், அதே
நீரோட்டங்கள் அமையும். இயற்கை, அதன்
இயல்பிலேயே, கட்டுக்கடக்கப்பட்டு, வழி
வகைக்குட்படுத்தப்படாது, சுதந்திரமாக
உலவ அனுமதிக்கப்பட்டால், இதத்தை
விட இன்னலையே அதிகந்தரும். விஞ்ஞா
னத்திடம், இத்தகைய குறைகாணமுடி
யாது, அது, இயற்கையின் கொடுமை
யைக்கூட மாற்றும் பெருங்குணமுடை
யது; அதனைவரவேற்கும் பணியை,
வாலிபர்கள் மேற்கொள்ள வேண்டும்.
விஞ்ஞானம், சர்வவல்லமையுடைய
தென்று யாரும்விளம்பரஞ்செய்யவில்லை.
அதன் முடிவுக்கு மாற்றமோ திருத்தமோ
இல்லை என்றுரைப்பாருமில்லை. அதுவள
ரும் தன்மையுடையது! வள்ளற்றன்மை
கொண்டது! வெடிகுண்டும்விஷப்
புகையும் விஞ்ஞான விளைவுதானே என்று
வீணுரை பேசுவோர், சகலத்திற்கும்
பொறுப்பாளியான பரம்பொருளின்
படைப்பிலே, பூந்தோட்டமும் அதிலே
பதுங்கியிருந்து பூவையரைத்தீண்டிடும்
நச்சரவும், வற்றாத ஆறும் அதிலே, புர
ளும் முதலைகளும், தேனும் தேளும், மல
ரும் மலமும், அகிலும் புனுகும், புயலும்
எரிமலையும், என இதம் இடர் எனும்
இருவேறு பயன்தரும் பொருள்களிருப்
பானேன் என்பதற்கு என்னசமாதானம்
கூறுவர்! பாவ சிந்தனையை மனிதனுக்
குப் பரம்பொருள் தருவானேன், பிறகு
புண்ணியமார்க்கப் போதகர்களை அனுப்பு
வானேன்! தரித்திரத்தை ஏற்படுத்துவா
னேன், பிறகு தர்மப்பிரபுக்களைச் சிருஷ்
டிப்பானேன்? அனாதைகளை உண்டாக்கு
வானேன் பிறகு அவர்கட்கு இரட்சகராக
அவதரிப்பானேன்? அவரன்றி ஓரணுவும்
அசையாதே, ஏன் அவர், அக்ரமமும்
அநீதியும் தோன்றிடாதவாறு, செய்தி

ருக்கக்கூடாது! தனது சிருஷ்டியின் சேஷ்டைகளைப் படைப்புக்கர்த்தனாலேயே, அடக்கவோ தடுக்கவோ முடியவில்லை என்றால், சர்வவல்லமையுள்ளதென்று சாற்றிக்கொள்ளாததும், முடிந்த முடிவு என்றுசொல்லிக்கொள்ளாததும், மானிட அறிவின் வளர்ச்சியிலே ஒரு பகுதி என்று மட்டுமே கூறிக்கொள்வதுமாகிய விஞ்ஞானத்தின்மீது, அதன் விளைவுகளைக் கெட்டகாரியத்துக்குப்பயன்படுத்துவோரின்மீது தூவிடவேண்டிய தூஷணைகளை வீசுவது, நீதியா, என்று கேட்கிறோம். இதுபற்றிய, கருத்தை, வைசிராய் பிரபு அவர்கள் மிக அழகாகச் சின்னாட்களுக்கு முன்னம், நடைபெற்றவிஞ்ஞானமாநாட்டிலே எடுத்துரைத்தார்.

விஞ்ஞானிகள் மாநாட்டிலே, வைசிராய் பிரபு பேசினார்-விஞ்ஞானத்தின் அருமை பெருமைகள்பற்றியும், அதன் அவசியத்தைப்பற்றியும். எதிர்காலத்திலே, இந்திய பூபாகத்திலே, விஞ்ஞானம் அரும்பணி புரியவேண்டியிருப்பதையும் அவர் எடுத்துவிளக்கினார். இங்கு தங்களை மேதாவிகள் என்று கருதிக்கொண்டுள்ள ஒரு கூட்டத்திற்கு, விஞ்ஞானம் என்றாலே, வேம்பு. அவர்களின், பூகோள, சரித, கணித, அறிவுயாவும், பல பலயுகங்களுக்கு முற்பட்டது. விஞ்ஞானத்தை அவர்கள் விவேகத்தின் விரோதிஎன்றும், ஆண்டவனின் அருளுக்கு எதிரிடையான மருளென்றும், இகபரசுகத்தின் இலட்சியத்துக்கே இடையூறுண்டாக்குவதென்றும் கூறித்திருப்தி அடைவதோடு, பாமரமக்களிடையே, பழயகாலவாடைதுளியும் நீங்காதபடி பார்த்துக்கொள்வர். இந்தப் போக்கிலே அவர்களுக்கு இலாபம் இருக்கிறது, சுகவாழ்வும் ஆதிக்கமும், உயர்வும், இந்த அடிப்படைமீது அமைத்துக்கொண்டுள்ளனர், எனவே, அவர்கள் அவ்வப்போது புதுப்புதுத் தாக்குதல்களைச் சமாளிக்கக் கூடியபடி, தமது முறையைப் பழுது பார்த்துக்கொள்ள அறிவைச் செலவிடுவதிலும் ஆச்சரியமில்லை. சாதாரணப் படிப்பும் போதுமானஅளவுகூடப் பரவாதஇங்கு, இல்லாமலா சொல்வார்கள்? என்ற சோம்பேறிப்பேச்சும், இவருக்குத்தான் எல்லாம் தெரியுமோ, என்ற சந்துமுனைப்பாஷையும்,இருப்பதிலேயும் ஆச்சரியமில்லை. இந்நிலையிலே, வைசிராய் தமது சொற்பொழிவிலே, விஞ்ஞானத்தைப் புகழ்ந்ததைச், சுதேசமித்ரன், ஜாடையாகக் கண்டித்துமிருக்கிறது.

கொலைத்தொழிலுக்கே இன்று விஞ்ஞானிகளின் சேவைஎல்லாம் உபயோகமாகிவருகிறது. ஆரம்பத்திலிருந்தே அதை நேர்வழியில் பயன்படுத்தியிருந்தால் இப்போது உலகின்நிலை இப்படியா இருக்கும்! மனிதவர்க்கத்தின் இன்னல்கள் பலவற்றை அடியோடு போக்கடித்திருக்கலாம்'' என்று சுதேசமித்ரன் கூறுகிறது. விஞ்ஞானிகளின் சேவையை உபயோகித்துக்கொள்பவர்கள், எந்த முறையை, எந்தநோக்கத்தைக் கையாளுகிறார்களோ, அதைப்பொறுத்து, அதன்விளைவு இருக்கும். ஆகவே, குற்றச்சாட்டுக் குரியவர்கள், விஞ்ஞானிகளல்ல, விஞ்ஞானிகளின் விலைமதிக்கொணா அறிவுத்திறனைத், தவறானவழியிலே உபயோகித்தவர்களையே, குற்றம்சாரும். இதற்காக விஞ்ஞானத்தை இடித்துரைப்பது மடைத்தனம் என்போம்.

விஞ்ஞானத்தின் விளைவை, விபரீதமான காரியங்கட்குப் பயன்படுத்துவோரைக் கண்டிப்பதைவிட்டு, விஞ்ஞானத்தையே குறைகூறும் குணாளர்களை நாம் கேட்கிறோம், இகபரசுகமார்க்கமென்றும், ஒழுக்கமென்றும், சன்மார்க்கத்திற்குவழியென்றும், சாதாரணமக்களின் மொழியல்லாது அருள்வாக்கென்றும் புகழப்படும் மதத்தின் கட்டளைகளின்படி, உலகிலே, எவ்வளவுபேர் நடக்கிறார்கள்? மூன்றுபுரங்களைக் கண்ணொளியால் சுட்டு நீறாக்கினார், என்று அழிக்கும் பெருமையையன்றோ அரனாருக்கு அணிகலனாகச் சூட்டியுள்ளனர்! ஒவ்வோர் அவதார காலத்திலும், இன்னின்ன அசுரனைச் சம்ஹரித்தார், என்று பெருமையோடன்றோ, அரிகதாகாலட்சேபம் நடத்துகின்றனர். இத்தனை இத்தனை அக்ரோணிச்சேனைகளை எமது முருகனின் எறிவேல்கொன்றது என்று கூறியன்றோ பூரிக்கின்றனர். அன்புக்கும் அருளுக்கும் ஊற்றாகவும், சன்மார்க்கத்துக்கும் சமரசஞானத்துக்கும் உறைவிடமாகவும் சித்தரித்திருக்கவேண்டிய பரம்பொருளுக்கே, அழிவு, அழிவு, அதிலே ஒரு சாமிக்கு மற்றோர் சாமிபோட்டி, இவரினும் அவர் பெரியார், இவர் துணையை அவர் நாடினார், என்று கூறியன்றோ மதவாதிகள் பெருமைகொள்கின்றனர். இவர்கள், விஞ்ஞானத்தை, ஒருபழியுமறியாத புத்தறிவைப்பழிப்பது, வாய்த்துடுக்கு மட்டுமல்ல, தமதுவறட்டு ஜம்பத்தை விஞ்ஞானம், வெட்ட வெளிச்சமாக்கிவிட்டதே, என்ற கோபம் என்று கூறுவோம்.

இரணியாட்சசன் காலத்திலே, பகவான் விஷ்ணு வராகஅவதாரமெடுத்துப் பூலோகத்தைப்பாயாகச்சுருட்டிக்கொண்டுபோய்விட்டார், என்று கூறும் புராணம் அண்டப்புளுகு, அறிவைச் சூறையாடிப் பிறகு அவர் தம்பொருளைப் பறிக்க ஒரு கயவாளிக்கூட்டம் கட்டிவிட்ட புனைசுருட்டு. உலகம் உருண்டைவடிவானது, பல கோளங்களிலே ஒன்று, விஸ்தீரணம்இவ்வளவு, இன்னின்னவளங்கள் உள்ளது, அதன் உற்பத்திவரலாறு இப்படிப்பட்டது என்ற விஞ்ஞான அறிவு நாட்டுமக்களிடை பரவாதிருக்கும் வரையில்தானே, அப்புனைசுருட்டு பூசுரக் கூட்டத்திற்கு, வயிற்றைநிரப்பும் வாய்க்காலாக இருக்கமுடியும்! பூமி உருண்டை என்ற புதுஅறிவு பிறந்துவிட்டால், புராணப்புளுகன் தன்வஞ்சகவாழ்வை மூட்டை கட்டிவிடத்தானேவேண்டும்.

அதுபோலவே, இங்கு பாமரமக்களை ஏய்க்கப் புனைந்துள்ள பொய்யுரைகள் யாவும், விஞ்ஞானம் வளர்ந்தால், கதிரவனொளி முன்பு மூடுபனி நில்லாதுபோதல் போலச்சிதறுமே, என்றபயம், சிலரை, சுயநலத்தையேசாத்திரமாகக்கொண்டவர்களை, விஞ்ஞானத்தைக் கண்டித்துப் பேசவைக்கிறது. ஆனால் அறிவுலகம் அவர்களின்போக்கைச் சட்டைசெய்யாது! புரட்டரின் வாழ்வு பொசுக்கப்படவும், உண்மை துலங்கவும், காலம்பிறந்துவிட்டது. விஞ்ஞானம், வைதீகவெறியரின் வாழ்வை நீடிக்கவிடாது. சுயநலக் கோட்டைகளுக்கு அது சம்மட்டியாகும்! அறிவுக்கு எதிரிடையாகக் கிளம்புவோரின் ஆதிக்கத்தைஅது அரிவாளால் சிதைத்தொழிக்கும். மனமருளை நீக்கும். மக்கள் துயர்போக்கும். மண்ணிலிருந்து மணி, கடலிலிருந்து முத்து, கட்டையிலே கலம், கருவிலே மாற்றம், விண்ணிலே ஏற்றம், என்று, விஞ்ஞானம் எங்கும் பரிணமிக்கத்தான்போகிறது. கோளங்களின் தன்மை, ஒன்றுக்கொன்றுள்ள தொடர்பு, இன்று பாலபாடமாகிவிட்டது. நோய்வகை, அதுதீரும் முறை இன்று பலசரக்குக்கடைக்கு வந்துவிட்டது. அமெரிக்காவும்ஆப்பிரிக்காவும் நமது வீட்டு அறையிலே கொண்டுவந்து நிறுத்தப்பட்டுவிட்டது.

தாயுமானார் பாடினார் கந்துகமதக் கரியைவசமாய் நடத்தலாம்......என்று, கடைசியிலே, சிந்தையை அடக்கியே சும்மா இருப்பதரிது என்றுகூறினார்! ஆம்! சிந்தையை இங்கு அடக்கிச்சும்மா இருக்க முடியாததான், சிற்றம்பலத்தானின் மான்மழுவுக்குச் சிந்துபாடவும், சித்தாந்தத்திற்கும் வேதாந்தத்திற்கும் சம்வாதம் ஏற்படுத்தவும், புலவர்பெருமக்கள்தமதுநேரத்தைச் செலவிட்டனர், செலவிடுகின்றனர். அஃதன்றி வேறொன்று வேண்டோம் என்று செருக்குடன் பேசுகின்றனர்! அன்று முதல் இன்றுவரை [ஆங்கிலேயனின் அறிவைஇரவல்பெறும்போதன்றி, மற்றப் போதில்] நோய்க்கு மாரியும் வேப்பிலையும், நவக்கிரகமும் ஐயருக்குத்தானமும், பரிகாரமாக உள்ளன! அன்று முதல் இன்றுவரை, பூமி தட்டை, சூரியனின் இரதம் மகாவேகமுடையது, சனிபகவானுக்கு வாகனம் காக்கை, சண்டிகேஸ்வரருக்குக்காது செவிடு, சங்கராச்சாரியாருக்கு அம்பாள் பிரத்யட்சம், ஞாயிற்றுக்கிழமைகளிலே கருடதரிசனம் மிக்க பலன்தரும், ஆருத்ராகண்டால்ஆறுஜென்மமும் அதிர்ஷ்டம், வைகுண்ட ஏகாதசிக்குவிரதமிருப்பின்வரம் நிச்சயம், மகாமகக்குளத்திலே மூழ்கினால் முப்பாட்டன் காலமுதல் மூண்டுவரும் பாபம் தொலையும், என்ற அந்தப்பழயபோதை தெளியக்காணோம். சிந்தையைஅடக்காத மேனாட்டார் ஆளவும் நாம் அடிமைகளாகவும் இருக்கும் நிலைமைக்கே முக்கிய

(6-ம் பக்கம் பார்க்க)

## விஞ்ஞானம்-விடுதலை வீரன்

காரணம், நமது நாட்டவர் சிந்தையை அடக்காது சிவலோகம்வரை பாயவிட்டு, சித்துக்களை நம்பி, சத்தான பொருளைக் கைவிட்டதும். மேனாட்டார், காற்றைக் கடலை அடக்கவும், நோய் நொடியைப் போக்கவும் இயற்கையின் பலனைப்பெறவும் கற்றதனால்தான்! இன்று விஞ்ஞானமே மேனாட்டாரின் ஆக்ஞா சக்ரம்! இங்கோ அந்தக்காலத்து ஆண்டவ ஆட்சியிலே, ஒரே துறையிலே பசுவும் புலியும் நீர்பருகும், புலித்தவறிநடக்குமானால் ஆக்ஞாசக்கரம், கரகரவெனச் சுழன்று வரும் புலியின் சிரம் அறுபடும் என்று கூறும், புராணிகனே ஆட்சிசெலுத்துகிறான். உண்மையிலே, புலியையும் பசுவையும் ஒரே துறையிலே நீர் அருந்தச்செய்யும் ஆக்ஞாசக்கரம், சாதாரண சர்க்கசிலேயே பார்க்கிறோம்! விஞ்ஞானியின் ஆக்ஞாசக்கரம், வேண்டும், வெளிநாட்டாரின் விளையாட்டுக்கூடமாக, வேட்டைக்காடாக, இந்தியபூபாகம் இருக்கும் அடிமை நிலைமை மாறவேண்டுமானால். அடிமைக்கு விடுதலைமார்க்கம், விஞ்ஞானத்தின் வீறுகொண்ட ஆட்சியிலேதான் இருக்கிறது. ஓங்குக விஞ்ஞானம்!!

---

# பார்வதி பி, ஏ;

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டாளும், உத்தமியும் ஆப்த நண்பர்களாயினர், ஒருவருக்கொருவர் உதவி செய்யவே உலகிலே பிறந்தவர்களல்லவா! உத்தமியுடன், சிலவாரங்கள் பார்வதி இருந்தாள், பிறகு, சென்னை செல்ல வேண்டிய அவசியம் நேரிட்டது. உத்தமியைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்,நாங்கள் கவனித்துக்கொள்ளுகிறோம் என்று ஆண்டாளும், லேடிடாக்டரும் உறுதி கூறினர். கர்ப்பிணி வேஷத்திலிருந்த ஆண்டாளுக்கு, அனந்தாச்சாரியார் உபசார முறைக்கும்போதெல்லாம்,வேறோர் அறையிலே, உண்மையிலேயே கர்ப்ப வேதனையை அனுபவித்துக்கொண்டிருந்த உத்தமிக்கு, லேடிடாக்டர் உபசாரம் செய்வாள். "நானும் உன்னைப்போலவே, ஒரு ஆடவனின் சாகசத்துக்குப் பலியானவள், ஆகவேதான், உன்னிடம் எனக்கு அன்பு உண்டாயிற்று. இல்லையானால், நான் ஒருபோதும் இந்தச் சூதுக்கு ஒப்புக்கொண்டிருக்க மாட்டேன், உத்தமீ! உனக்காவது, பார்வதியும் குமுதினியும் தக்கசமயத்திலே, உதவி செய்தனர், உன் கருவிலிருக்கும்சிசுவுக்குச் சாசுவதமான நன்மையைத்தேடிவிட்டனர், உன்னையும்உலகம் பழிக்காதபடி, ஆண்டாள்என்றகவசத்தைத்தேடிவைத்தனர்.என்கதையோ, மிக்கத்துயரமானது. உலகிலே, எனக்கிருக்கும்ஒரேபற்று,ஆடவரிடம் சிக்கித் துன்பப்படும் பெண்களுக்கு என்னாலான உதவியைச் செய்வதுதான். எங்கெங்கு, என்னென்ன விதத்திலே காதல்தீ மூண்டுவிடுகிறது என்பது எனக்கெப்படித்தெரியமுடியும்? அந்தத் தீயினால்உண்டான வடுக்களுடன், என்னிடம் வருபவருக்கு நான் புண்போக்கமருந்திடுவது, என்வாழ்க்கைநோன்பாகிவிட்டது. நான் இப்போது பலருக்குச்செய்யும் உதவியைப்போல, எனக்கு யாரேனும் உதவிசெய்திருந்தால் இன்று பிருந்தாவனத்திலே, இதோ, இந்தத் தங்கரூபன், ஓடிவிளையாடிக்கொண்டிருந்திருப்பான்'' என்று கூறிக்கொண்டே ஒருபோட்டோவை, உத்தமியிடம் கொடுத்தாள். மூன்றாண்டு நிரம்பாத, முறுவலுள்ள ஆண்குழந்தையின் உருவப்படம்! அழகுவழிந்தது; புகைப்படத்திலே! உண்மையிலேயே தங்கரூபன்!! அக்குழந்தையின் அழகைக்கண்டு உத்தமி ஆச்சரியப்பட்டாள், ஆனால், லேடிடாக்டரின் கண்களோ, நீரைச்சொரிந்தன. "டாக்டர், இது உன்மகனா?" என்று கேட்டாள் உத்தமி.

[தொடரும்.]

### "இராமசாமிப் பெரியார் நகர்"

சைதாப்பேட்டை; டிச. 30.

27–12–43 திங்கட்கிழமை மாலை "பனகல்" கட்டிடத்தில் நடைபெற்ற செங்கற்பட்டு ஜில்லாபோர்டு கூட்டத்தில், கடப்பேரி, இரும்புலியூர், தாம்பரம் ரெவினியூ கிராமங்களைக் கொண்ட தாம்பரம் டவுன் பிளானிங் எல்லைக்குட்பட்ட பிரதேசத்திற்கு "இராமசாமிப் பெரியார் நகர்'' என்று பெயரிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு போர்டு தலைவர் திரு. T, சண்முகம் அவர்கள் தலைமைவகித்தார்கள்.

### போலந்து புகுந்தனர்!

சோர்விலாச் சோவியத்வீரர்கள்ரஷிய நாட்டிலே ஒரு பகுதியிலிருந்து, அதாவது யுக்ரைன் பகுதியிலிருந்து, ஜெர்மன் படையை முறியடித்து, விரட்டியடித்துக்கொண்டே சென்றனர். சோவியத் எல்லையைத்தாண்டிவிட்டால் தலைதப்பும் என்று எண்ணிய, நாஜிப்படையின், பிடரியிலே சம்மட்டி அடிவிழுவது ஓயவில்லை! போலந்து எல்லையிலும், போர் நின்றுவிடவில்லை. சோவியத் படை, போலந்துக்குள் பிரவேசித்துவிட்டது!

### வாழ்த்துகிறோம்.

புத்தாண்டின் பட்டமளிப்பிலே, இவ்வாண்டு, அதிகாரக்குழுவினருக்கே அதிக அக்கரை காட்டப்பட்டிருக்கிறது. இப்போக்கை, மெயில் பத்திரிகை கண்டித்திருப்பது, முற்றிலும் முறையே. அதிகாரிகளாக இல்லாமல், ஊதியம்பெறாது ஊருக்குழைப்போருக்குப்பட்டம் வழங்குவது, முறையாமேயன்றி, அதிகாரவர்க்கத்துக்கே அமோகமாகக் கௌரவத்தை நல்குவது சரியல்ல. மக்கள் மன்றம்,எதிர்பார்த்தபடி பலருக்குப்பட்டம் தரப்படவில்லை என்ற போதிலும், விருதுநகர் V. V. இராமசாமி, மதுரை ரெங்கசாமி நாயுடு, திருச்சி T. V. சோமசுந்தரம், செங்கற்பட்டு M. வேதாச்சல முதலியார் ஆகிய நமது அன்பர்கள் பட்டம் பெற்றனர். நமது வாழ்த்து அவர்கட்கு வழங்குகிறோம். புத்தாண்டுப்பட்டம்பெற்றயாவரும்,பொதுமக்கள்தொண்டுசெய்ய முன்னைவிட அதிகமாக முனைந்து நிற்க வேண்டுகிறோம். பட்டம்; தோட்டக்கச் சேரிக்குப் படியல்ல, பண்புக்கு அத்தாட்சி. அதன்படி, பணியாற்ற அவர்கள் முன்வரவேண்டுகிறோம்.

---

### தமிழ்த் திருமணம்.

சிதம்பரம் தெற்கு வாணியத்தெருவில் 6-12-43 காலை கீள்ளை திரு. சின்னைய நாடார் மகள் திருவளர் செத்திலும்பாளுக்கும் சிதம்பரம் திரு. அண்ணாமலை நாடார் மகன் திருவளர் பேச்சிமுத்துவுக்கும் தோழர் மணவழகனார் தலைமையில்-புரோகிதமாவது சடங்காவது யாதுமின்றி மாலை மாற்றித்தாலிகட்டியதோடு திருமணம் நிறவேறியது. இந்த புதுமுறைகளைப்பற்றி மணம் முடிந்தவுடன் சொற்பொழிவு நடந்தது-இதன் நினைவுக்காக தமிழர் நலஉரிமை கழகத்துக்கு ஒரு ரூபாயும் திராவிடநாட்டுக்கு ஒரு ரூபாயும் திருமண வீட்டாரால் நன்கொடை தரப்பட்டது.

---

## சேலம் தமிழுணர்ச்சி மகாநாடு.

தமிழுணர்ச்சி மகாநாடு சேலம் திருவள்ளுவர் கழகச் சார்பில் சென்ற 25, 26-12-43-ந் தேதிகளில் சேலம் கல்லூரியில், கல்லூரித்தலைவர் தோழர் ஏ. இராமசாமிக்கவுண்டர் எம். ஏ., எல். டி., அவர்கள் தலைமையில், தோழர் எஸ். எஸ். வேலாயுதம்அவர்கள் தண்ணளியில், டாக்டர் எஸ். எம். நமசிவாயம் அவர்களால் கூட்டப்பெற்றது. வெளியூர்களிலிருந்தும்உள்ளூரிலிருந்தும் சுமார் 2000க்கு மேல் மக்கள் கூடினார்கள்.

சென்னைப் பெரும் புலவர்கள் தோழர்கள் தேவனேயப் பாவணர், இளவழகனார், சரவண முதலியார்,சேலம்வரதநஞ்சையா பிள்ளை, பொன்னுசாமிநாய்க்கர், புத்தனேரி சுப்பிரமணியம் முதலியோர்கள் தமிழின் உயர்வையும், தமிழ்மக்கள் மேம்பாட்டையும், தமிழர் செய்யவேண்டியனவற்றையும் பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள், பலமுக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின.

## கலை மன்னன்!

2-ம் பக்கத்தொடர்ச்சி.

நடிகர் கண்ணீர்விடவேண்டுமென்றால் உடனே "கிளிஸரைன்" வந்துவிடுவது இன்றும் ஸ்டுடியோக்களில் வழக்கமாயிருந்து வருகிறது. "மேனகா"வில் ராஜா அம்முறையைக் கையாளவில்லை. அரைமணி நேரமானாலும் அழுதே தீரவேண்டும் என்றாரேயொழிய, கண்ணில் மருந்து தடவி நீர்வரவழைக்க அவர் ஒப்பவில்லை. அவருடைய பயிற்றுவிக்கும் திறமைபாடகர்கள் பலரைக்கூட நடிகர்களாக்கியது.

"வசந்தசேனா" தமிழ்ப் படம் ராஜாவின் சிருஷ்டி. அரைப்பைத்தியங்கொண்ட "சாகரனாக" அதில் நடித்துள்ள ராஜாவை எங்ஙனம் மறக்க முடியும்? ராஜா உயர்ந்த நடிகர், டைரக்டர் என்பதோடு வசனமெழுதுவதிலும்ஆற்றலுடையவர் என்பதை "வசந்தசேனாவில்" நிரூபித்துள்ளார்,

முதன் முதலாக ராஜா வடநாட்டில் புகுந்தபொழுது அவரது வலிமையிலும், திறமையிலும், பொறாமைக்கொண்ட பல வடஇந்திய நடிகர்கள் எவ்விதத்திலும் ராஜாவை ஒழித்துவிடப் பல்வகையான சூழ்ச்சிகள் செய்ததாக ராஜா கதைகதையாகச் சொல்லுவார். அடிப்பதுபோல் நடிக்கவேண்டிய கட்டங்களில் வஞ்சகர் பலர் ராஜாவை உண்மையாகவே அடித்து விடுவார்களாம். உடனே ஸ்டுடியோ போர்க்களமாகிவிடுமாம்.

அவருடைய வீரத்திற்குச் சான்றுகூறுவதுபோல், பல வெட்டுக் காயங்களும், குத்துக்காயங்களும் விரிந்த மார்பில் பொலிந்து விளங்கியதைக் கண்டோம்.

வடநாடு, ராஜாவை எளிதில் ஏற்றுக்கொள்ளவில்லை. அவரது திறமைக்காக ஏற்றுக்கொண்டவர் சிலர். வலிமைக்கஞ்சி ஏற்றுக்கொண்டவர் பலர்.

பேசாப் படவுலகில் சிறந்த அழகிகளென்று கருதப்பட்டுவந்த கோஹர், சுலோசனா போன்ற வடஇந்திய நடிகையர் பலர் ராஜாவின் அழகிலும் ஆண்மையிலும் ஈடுபட்டு வரைந்த "காதற் கடிதங்கள்" அவரது மேஜையில் கட்டுக் கட்டாகக் கிடப்பதைக் கண்டோம்.

பழகுபவர் எவரையும்உரிமைபாராட்டி ஒருமைப் பதங்களால் அழைப்பது ராஜாவின் இயற்கைக்குணம். புதிதாகப் பழகுபவர் இதைத்தவறாகவெண்ணவுங்கூடும். ஆனால், மற்றவர் விருப்பையோ வெறுப்பையோ ராஜா பொருட்படுத்துவதில்லை.

"டே சம்முகோம்!" என்று ராஜா என்னை அன்புடன் அழைக்கும் குரல் இன்றும் எனது செவியில் ஒலிக்கின்றது.

"மேனகா' ஒத்திகை நடந்துகொண்டிருந்தபோது, ராஜா ஒருமைப் பதங்களால் அழைப்பதை விரும்பாத ஒரு நடிகை, முதலாளிகளிடம் சென்று 'பிராமணராயிருந்து வாடி, போடி, என்று கூப்பிட்டாலும் பரவாயில்லை. சூத்திராகிய இவர் அவ்வாறு அழைப்பதைக் கேட்டுக்கொண்டிருக்க முடியாது'என்று கூறியதாகக் கேள்விப்பட்டோம். இதை அறிந்த ராஜா, "என்மகளுக்கு மகளாக இருக்கத்தக்க பருவத்திலுள்ள சிறுமியை நான் அன்புடன் அழைத்தது அவளுக்கு வெறுப்பாய்ப் போய்விட்டது போலிருக்கிறது. அவ்வாறு கூப்பிடக்கூடாது என்று சொல்லியிருந்தால் நான்வருத்தப்பட்டிருக்கமாட்டேன்; பிராமணனாயிருந்தால் கூப்பிட்டிருக்கலாம் என்ற வார்த்தை தான் என்மனதைப் புண்படுத்துகிறது" என்றார்.

"நன்றல்லதன்றேமறப்பது நன்று" என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாக விளங்குபவர்ராஜா. ஒருநாள் ஸ்டுடியோவில் ஒருவருடன் பிரமாதமான சண்டை நடக்கும். மறுநாள் அவருடனேயே ராஜா களிப்புடன்பேசிக்கொண்டிருப்பதைக் காணலாம்.

மேனகாவுக்கு முன் பம்பாய்க்குவந்த தென்னிந்திய நடிகர்களின் நடிப்பைக் கண்ட வடஇந்திய நடிகர்கள் "என்ன ராஜா! உங்கள் மதராஸ் வாலாக்கள் இப்படி நடிக்கிறார்களே" என்று கேலி செய்வார்களாம்.

"நீங்கள் வந்துதாண்டா என் மானத்தைக் காத்தீர்கள்" என்று ராஜா எங்கள் நடிகர்களிடம் அடிக்கடி கூறுவார். 'பில்மோரியா' 'ஈஸ்வர்லால்' முதலிய நடிகர்கள் எங்கள் படப்பிடிப்பின்போது வந்து நிற்பார்கள். அவர்களிடம் ராஜா, "பார்த்தீர்களாடா தமிழ்நாட்டு இளங்குழந்தைகளின் நடிப்புத் திறமையை? இன்னும் இரண்டு படத்தில் நடித்தால் உங்களை எல்லாம் தோற்கடித்து விடுவார்கள்" என்று பெருமையுடன் கூறுவார்.

ஒரு நாள் மேனகாவில் டிப்டிகலெக்டர் பங்களாக் காட்சிக்கு ஸ்டுடியோவிலுள்ள மட்டரகமானசோபாக்களையும், நாற்காலிகளையும்போட்டுவிட்டு செட்டிங் மாஸ்டர் அலட்சியமாயிருந்துவிட்டார். அப்பொழுது ராஜா ரஞ்சித்மூவிடோனிலேயே நடிகராகவும் டைரக்டராகவும் மாதச்சம்பளத்தில் இருந்தபடியால் இதுபற்றி சிரத்தையெடுத்துக்கொண்டு கேட்பாரென அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஷூட்டிங்கின் போது ராஜா வந்து பார்த்தார். கண்களில் கோபத்தணல் வீசியது. "ஏண்டா! ரஞ்சித் மூவிடோனில் நல்ல "பர்னிச்சர்ஸ்" கிடையாதா? ஏன் இவ்வளவு ஒட்டை உடைசல்களை எல்லாம் எடுத்துப் போட்டிருக்கிறீர்கள்?" என்றுகேட்டார். செட்டிங் மாஸ்டரும், ஸ்டோர் கீப்பரும் முனகிக்கொண்டே, "மற்ற "பர்னிச்சர்ஸ்" எல்லாம் நமது படங்களுக்கு ஸ்பெஷலாக உபயோகிப்பது......" என்றுஇழுத்தார்கள். உடனே ராஜா கடுங்கோபத்தோடு "ஏண்டா! ஸ்டுடியோவுக்கு முள்ளங்கிப்பத்தைபோல் ரூபா பதிமூவாயிரம்வாங்கவில்லையா? தமிழ் நாட்டான் காசு உங்கள் பாட்டன் வீட்டுச் சொத்தா?"என்று கேட்டார். உள்ளே இந்த கலாட்டா நடந்துகொண்டிருந்தபோது, வெளியேயிருந்து வந்துக்கொண்டிருந்த ஸ்டுடியோ முதலாளி "சந்துலால்ஷா" பேசாமல் திரும்பி விட்டார். பிறகு முறைப்படி காரியம் ஒழுங்காய் நடந்தது. ராஜாவின் வலிமைக்கு வடநாட்டார் அவ்வளவு தூரம் பயந்திருந்தார்கள்'

மேனகா படப்பிடிப்பு முடிந்து நாங்கள் தமிழ்நாடு திரும்பியபொழுது தாதர் ரயில் நிலையத்திற்கு வழியனுப்ப வந்த ராஜா கரங்களை மேலேதூக்கிக்கொண்டு கண்களில் நீர்பெருக, "டேய் பசங்களா! தொழில் சமயத்தில் கோபத்தில் உங்களைத் திட்டியிருப்பேன், தாறுமாறாகப் பேசியிருப்பேன், என்னசெய்திருந்தாலும் மறந்திருங்கடா, மனதிலே வைக்காதிங்கடா" என்று கூறியதை எண்ணும்போது, இன்றும் கண்களில் நீர் சுரக்கின்றது.

மேனகாவுக்குப்பின் நான் பாலாமணி படப்பிடிப்புக்காகப் பம்பாய் சென்றிருந்த பொழுது "புனா"விலும், "திருநீலகண்டர்'படப்பிடிப்பின்போது சென்னையிலும், தோழர் N. S. K. அவர்களின் புதுமனைப்புகுவிழாவில் நாகர்கோவிலிலும் ராஜாவைக் காணும் பேறுபெற்றேன். ஒவ்வொரு முறையும் அன்புடன் தழுவிக்கொண்டு அவர்காட்டிய பரிவு மறக்கமுடியாது.

இப்பேர்ப்பட்ட வீர நடிக ராஜா நவம்பர் 24ந்தேதி கோவையில் மாரடைப்பினால் மாண்டார் என்ற செய்திகேட்டு உணர்ச்சியுள்ள தமிழ்நடிகர் ஒவ்வொருவரும் துயருற்றனர்.

சாதாரணமாக நடிகர்களிடம் டைரக்டர் நல்லபெயர்வாங்குவதென்பதுஅரிது. அப்படி ஒருவரிருவரிருப்பினும் எல்லா நடிகர்களும் அவரைப் போற்றுவதென்பது கனவிலும் நினைக்கமுடியாதது.

ராஜா ஒருகுடிக்காரர் என்பதொன்றே எல்லோரும்கூறும் குறைபாடு. அதைத்தவிர அவர் டைரக்ஷனில் நடித்துப்புகழ்பெற்ற பாகவதர், சின்னப்பா, N.S.K. முதலிய எந்த நடிகரைக் கேட்டாலும் போற்றியே கூறுவார்கள்.

சென்ற ஒருவருட காலமாக அவர் குடிப்பதை அறவே நிறுத்திவிட்டதாக நாங்கள் நண்பர்கள் வாயிலாக அறிந்தோம். அந்தக்குறைபாடுமில்லாமல் அவர் தொண்டு செய்யும் பயனை அனுபவிக்க தமிழ்நாடு கொடுத்துவைக்கவில்லை.

உண்மைத் தமிழ் நடிக, நடிகையர் இல்லங்களிலெல்லாம் ராஜாவின் புகைப்படம் காணப்படவேண்டும்.

(8ம் பக்கம் பார்க்க)

## கலைமன்னன்!

தமிழ்நாட்டு ஸ்டூடியோ ஒன்றிலேனும் "ராஜாவின் உருவச்சிலை" நாட்ட தமிழ் நடிகர்கள் முயற்சிசெய்ய வேண்டும்.

பிறப்பதும் இறப்பதும் இயற்கை. எத்தனையோ மக்கள் பிறக்கிறார்கள், வாழ்கிறார்கள், மடிகிறார்கள். ஒரு சிலர்தான் உள்ளத்தில் இடம் பெறுகிறார்கள். அவர்களில் ஒருவர் ராஜா!

தமிழனின் பெருமையை எடுத்துக் காட்டிய அவ்வீரனுக்கு உருவச்சிலை நாட்டத் தமிழ் நடிகருலகம் கடமைப்பட்டுள்ளது.

ராஜா, பெயரால்மட்டுமல்ல. உண்மையிலேயே ராஜாதான். அவர்புகழ் தமிழகம் உள்ளளவும் குன்றாது நின்று நிலவுக!!

## கைவல்யம் கடிதம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை ஏமாற்றி வருகின்றார்கள். அதுபோலவே புராணங்கள், காவியங்கள் காலத்திற்கேற்ற முறையில் தங்கள் தங்கள் சுயநலத்தை நாடி ஒவ்வொரு சமயத்தாராலும் செய்யப்பட்டிருக்கின்றன. அறிவு வளர்ச்சிக்கும் தற்காலப் போக்கிற்கும் மக்கள் வாழ்க்கைக்கும் முரண்பட்டவைகளையும், தவறாக இருப்பவைகளையும் ஒழித்துவிடவேண்டியதுதான், அவைகளிலுள்ளகுற்றங்களைஎடுத்துச் சொல்லுகிறவர்களிடத்தில் நாம் பொறாமையோ பகைமையோ காட்டுவதில் பயனில்லை. குற்றங்களை ஒப்புக்கொண்டு சீர்திருந்துவதுதான்கடமை. அதற்குமுட்டுக்கட்டையாக நின்று அறிஞர்கள் உள்ளத்தை மறைத்துப் பேசுவதுதான் குற்றம் என்றார்.

இந்தச்சபை, சச்சிதானந்தபிள்ளை B.A; L. T; அவர்கள் பிரசுரத்தால் கூட்டப்பட்டது. திருநெல்வேலி, பரம்பரைச் சைவர்கள் உண்டானவிடம். படித்தவர்கள் பண்டிதர்கள் சிவபூசைசெய்கிறவர்கள் நிறைந்த கூட்டம். நீங்களோ சபைத் தலைவர்; இதைப்பார்த்தும்கேட்டுந்தானே உட்கார்ந்துக் கொண்டிருந்தீர்கள். அவர்கள் சொல்லியதைவிட நாங்கள் என்ன சொல்லிவிட்டோம், நாங்கள் ஊர் பேரோடுசொல்லுகிறோம். அவர்கள்விஷயத்தை உள்ளபடி அழுத்தமாகச் சொன்னார்கள். தோழர் வேதாச்சலம் அவர்கள் தமிழ் மக்களின் முன்னேற்றத்தின் பொருட்டுத் தாங்கள் செய்துவரும் நன்முயற்சிகள் இனிது நடைபெறுகவென்று ஈ. வெ. பெரியாருக்கு ஒரு கடிதமெழுதி விட்டு அவர்சும்மா இருந்துவிட்டார், இதில் மேற்சொன்னவர்கட்குக் கலைப் படிப்பில்லையா? உங்களுக்கில்லையா?

திருநெல்வேலியில் சைவசபைகூட்டுவதற்கும் அதில் தாங்கள் தலைமைவகிக்கவும் எங்கள் கலைப்படிப்பே காரணம். கலைப்படிப்பில் உயர்ந்தவர்களென்று பெயர்வாங்கிய அச்சபையிலிருந்த பெரியவர்கள் எங்களுக்கு உதவிசெய்வதே அறிவுடைமை என்று சொன்னதுமல்லாமல் எங்களிடம் பொறாமையோ பகைமையோ கொண்டு முட்டுக்கட்டை போட்டு அறிஞர்கள் உள்ளத்தை மறைத்துப்பேசுவதுதான் குற்றம் என்றும் உங்கள் தலைமையில், சைவர்களும் பண்டிதர்களும்கூடின சபையில் சொல்லியும் விட்டார்கள். அதனால் எங்கள் கலைப்படிப்பு ஒத்துக்கொள்ளப்பட்டுவிட்டது, தங்களுக்குக் கலைப்படிப்பில்லை என்று நாங்கள் சொல்லவேண்டியதில்லை, அதில் எங்களுக்கு என்ன காரியமிருக்கிறது. சமயத்தில்-சாஸ்திரத்தில் மேல்ஸ்தானம்வகுத்துக்கொண்டு உலகப்பொது விதிகளை எல்லாம் உல்லங்கனம்செய்து அதைக்கேட்டால் அது பிறப்புரிமை, இது சிறப்புரிமை என்று சொல்லி அதென்னப்பா பிறப்புரிமை மற்ற மதக்கடவுள்களின் முகத்திலெல்லாம் பிறப்புரிமை சமமாகத் தோன்றுகிறதே, நமது கடவுள் முகத்தில் மட்டும் பிள்ளை பிறக்கும் எந்திரம் எப்படியப்பா வந்ததுஎன்றால், அது சாஸ்திர ஆச்சாரம், இது உலக ஆச்சாரமென்கிறார்கள். சாஸ்திர ஆச்சாரம் சமயஆச்சாரம் ஊராச்சாரமெல்லாம்இப்பொழுது இங்கிலீஷ் ஆச்சாரமாகப் போய்விட்டதே என்றால், சாஸ்திரத்தை நம்பாத நாஸ்திகன்என்கிறார்கள். இவர்களுடைய ஏமாற்றுவஞ்சனை, மற்றுமுள்ள எல்லாவற்றையும் உலகஜனங்களுக்குச் சொல்லுகிறோம். நாங்கள் சொல்லுவதிலுள்ள நியாயமில்லாததை அவர்கள் சொல்லட்டும்.

தங்களுக்குக் கலைப்படிப்பிருந்தாலும் கலையில் வியாபகமில்லை, வியாபகமிருந்தால் கீதையையும், திருஞான சம்பந்தரையும் குற்றம்சொல்லுகிறார்கள் என்று சொல்லமாட்டீர்கள். உள்ளதை எல்லாம் மாற்றானுக்குவிற்றால் குறுகிய களத்தில்தான் புத்திகுந்தியிருக்கும்.

ஞானசம்பந்தன் தன்னைப்பாடினன் என்னப்பர் என்னைப் பாடினார் என்று சிவபெருமானே சொன்னதாகச் சொல்லப்படுகிறது. திருஞானசம்பந்தர் அதிபாலியவயது, அப்பருக்கோ அதிகிழவயது; இரண்டுபேரும் சந்திக்கையில் அப்பர் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார், சம்பந்தர் வாரி எடுத்தார் என்றும் அப்பர் பாடின பாட்டிற்கு கதவுதிறக்கவில்லை, சம்பந்தர் பாட்டிற்கு கதவு திறந்ததென்றும் இருப்பதற்குக் காரணமென்ன? சீதையை இராமர் காட்டிற்கேன் அனுப்பினார்? விபரமாக எங்களுக்குச் சொல்லுங்கள். அப்பொழுது உங்கள் கலையின் வியாபகம் எல்லாருக்கும் தெரியும்.

இங்ஙனம்,

**கைவல்யம்.**




பவுன்நிறமுள்ள

# கிளி மார்க் பட்டணம் பொடி

தென்இந்தியா எங்கும் புகழ்பெற்றது. காரம், மணம், நிறம், வாடை கமழும் எமது கிளிமார்க் பட்டணம் பொடியை உபயோகியுங்கள்!
ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீங்காது ஞாபகம்.

விலை விபரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நீ-1. பவுன்கலர் | வீசை 1க்கு | ரூ. 8—8—0. | நீ-1. கருப்புநிறம் | வீசை1க்கு | ரூ. 8—0—0. |
| நீ-2. பவுன்கலர் | ,, | ரூ. 7—0—0. | நீ-2. கருப்புநிறம் | ,, | ரூ. 6—12—0. |

ஏஜண்டுஇல்லாஊர்களில் ஏஜண்டு தேவை.

**எ. எஸ். ராஜன் கம்பெனி,**

9-வெங்கடாசல நாய்க்கன்தெரு, பழய வண்ணாரப்பேட்டை, சென்னை.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.